பக்கங்கள் 21+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆனி04 புதன்கிழமை 18.06.2024 | அதிர்வு 319

## கெஹலிய குடும்பம் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிப்பு



04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்






# வல்வெட்டித்துறை நகர சபை ‘சைக்கிள்’ வசம்

## நகர பிதாவாக தவமலர் சுரேந்திரநாதன் தெரிவு

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ். வடமராட்சி, வல்வெட்டித்துறை நகர சபையின் புதிய நகர பிதாவாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசைச் சேர்ந்த திருமதி தவமலர் சுரேந்திரநாதன் தெரிவானார்.

வல்வெட்டித்துறை நகர சபையின் நகர பிதா, துணை நகர பிதா 04




### பரபரப்பான முத்தரப்புப் போட்டியில்

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபையை கைப்பற்றியது ‘சங்கு’ – ‘சைக்கிள்’ அணி

## மீண்டும் தவிசாளராக தியாகராஜா நிரோஷ் தெரிவு






(பிரபாகரன் டிலக்சன்)

யாழ். வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளராக பரபரப்பான முத் தரப்புப் போட்டியில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசியப் பேரவையின் வேட்பாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவானார்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை 04



# வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் மீண்டும் தமிழரசுக் கட்சியின் ஆட்சி

## தவிசாளராக சோமசுந்தரம் சுகிர்தன் தெரிவு

**(பிரபாகரன் டிலக்சன்)**

யாழ். வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சோம சுந்தரம் சுகிர்தன் தெரிவானார்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று வலிகாமம் வடக்கு பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூ ராட்சி ஆணையாளர் திருமதி தேவந் தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

35 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி



சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 11 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 9 ஆசனங்களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 6 ஆசனங்களையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியன தலா 3 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி 2 ஆசனங்களையும், தமிழ் மக்கள் கூட்டணி ஓர் ஆசனத்தை யும் கைப்பற்றியிருந்தன.

தவிசாளர் பதவிக்காக இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட சோமசுந்தரம் சுகிர்தன் 14 வாக்குகளை யும், அகில இலங்கைத் தமிழ்க் காங் கிரஸ் சார்பில் போட்டியிட்ட பத்மநாதன் சாருஜன் 9 வாக்குகளையும் பெற்ற னர்.

உப தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பொன் னுத்துரை தங்கராசா தெரிவானார்.



# நிலாவெளியில் ஓட்டோ விபத்து! சமூகச் செயற்பாட்டாளர் சாவு!!

**(எஸ்.கீதபொன்கலன்)**

நிலாவெளி பகுதியில் இன்று இடம் பெற்ற விபத்துச் சம்பவத்தில் ஓட்டோவில் பயணித்த திரியாயைச் சேர்ந்த சமூகச் செயற்பாட்டாளர் மாணிக்கம் நடராசா மரணமடைந்துள்ளதுடன் அவரது மனைவி பலத்த காயங்களுக்கு உள் ளாகியுள்ளார்.உயிரிழந்தவரின் சடலம் திருகோண மலை வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது.

திரியாய் காணி மீட்புப் போராட்டத்தில் தன்னையும் ஈடுபடுத்தி பல செயற்பாடு களில் இவர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# நுவரெலியா மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி

நுவரெலியா மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் உபாலி வனிகசேகர, பகிரங்க வாக்கெடுப்பு மூலம் மாநகர சபையின் புதிய மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்,

அதேநேரத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர் சிவன் ஜோதி யோகராஜா சபையின் துணை மேயராகத் தெரிவு செய்யப்பட்டார்.

மேயர் மற்றும் துணை மேயர் ஆகிய தெரிவுகள் மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் ஏ.எம். கே.பி.கே. சமிலா அத்தபத்து தலைமையில் இடம்பெற்றது.

இதில் தேசிய மக்கள் சக்தி சார்பாக உபாலி வனிகசேகர, சுயேச்சைக் குழு சார்பாக அஹகம இராமநாயகலாகே அஜித் குமார ஆகியோர் மேயர் பதவிக்குப் போட்டியிட்டனர்.



இதில் பகிரங்க வாக்கெடுப்புக்கு 14 வாக்குகள் கிடைக்கப் பெற்றதால், பகிரங்க வாக்கெடுப்பு இடம்பெற்றது. இதில் 14 வாக்குகளைப் பெற்று சபையின் மேயராக தேசிய மக்கள் சக்தி சார்பாகப் போட்டியிட்ட உபாலி வனிகசேகர தெரிவு செய்யப்பட்டார்.

எதிராகப் போட்டியிட்ட சுயேச்சைக் குழு உறுப்பினர் அஹகம இராமநாயகலாகே அஜித் குமார 11 வாக்குகளே பெற்றுக்கொண்டார்.

இந்த மாநகர சபைக்குத் துணை மேயரைத் தெரிவு செய்வதற்காக ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் வீரமலை இளையராஜாவும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் சிவன்ஜோதி யோகராஜாவும் போட்டியிட்டனர்.

இதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பாகப் போட்டியிட்ட சிவன்ஜோதி யோகராஜா 14 வாக்குகளைப் பெற்று துணை மேயராகத் தெரிவானர். இவருக்கு எதிராகப் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் வீரமலை இளையராஜா 11 வாக்குகளே பெற்றுக்கொண்டார்.

நுவரெலியா மாநகர சபை 25 உறுப்பினர்களைக் கொண்டது.

- ✯ தேசிய மக்கள் சக்தி - 12
- ✯ ஐக்கிய மக்கள் சக்தி - 04
- ✯ ஐக்கிய தேசியக் கட்சி - 03
- ✯ சுயேச்சைக் குழு - 03
- ✯ இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் - 02
- ✯ ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - 01

# இ.தொ.காவின் வசமானது நுவரெலியா பிரதேச சபை



நுவரெலியா பிரதேச சபையை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி கைப்பற்றியுள்ளது.

நுவரெலியா பிரதேச சபைக்குத் தெரிவான உறுப்பினர்களின் தவிசாளர், உப தவிசாளர் தெரிவு இன்று நண்பகல் 12 மணியளவில் நுவரெலியா பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர் வேலு யோகராஜ், பகிரங்க வாக்கெடுப்பு மூலம் பிரதேச சபையின் புதிய தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார், அதேநேரத்தில் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஹேவகே ஆஷா தில்ருக்ஷி பொன்சேகா சபையின் உப தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நுவரெலியா பிரதேச சபைக்கான தவிசாளர் மற்றும் உப தவிசாளர் ஆகிய தெரிவுகள் மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் ஏ.எம். கே.பி.கே. சமிலா அத்தபத்து தலைமையில் இடம்பெற்றது. இதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிஸ் சார்பாக வேலு யோகராஜின் பெயர் முன்மொழியப்பட்டது. அதனையடுத்து இரண்டாவது நபரின் பெயர் முன்மொழியப்படாதனால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர் வேலு யோகராஜ் சபையின் தவிசாளராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதில் மக்கள் போராட்ட முன்னணி உறுப்பினர் நடுநிலை வகித்தார்.

இந்தப் பிரதேச சபைக்கு உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்காக மூன்று பேர் போட்டியிட்டனர். அந்தவகையில், தேசிய மக்கள் சக்தி சார்பில் ஹேவகே ஆஷா தில்ருக்ஷி பொன்சேகா, ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் எம்.கே. சரத் குமார சிங்க பத்மசிறி மற்றும் ஜெயகுமார் ஜெயசங்கர் ஆகியோர் போட்டியிட்டனர். இதன்போது, பகிரங்க முறை வாக்கெடுப்புக்கு 13 வாக்குகள் கிடைக்கப் பெற்றதனால், பகிரங்க முறை வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இதில் தேசிய மக்கள் சக்தி சார்பாகப் போட்டியிட்ட ஹேவகே ஆஷா தில்ருக்ஷி 13 வாக்குகளைப் பெற்று உப தவிசாளராகத் தெரிவானர். இவருக்கு எதிராகப் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களான எம்.கே. சரத் குமார சிங்க பத்மசிறி 4 வாக்குகளையும், ஜெயகுமார் ஜெயசங்கர் 5 வாக்குகளையும் பெற்றுக்கொண்டனர். இதன்போது, மக்கள் போராட்ட முன்னணியின் உறுப்பினரும், ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரும் நடுநிலை வகித்தனர்.

நுவரெலியா பிரதேச சபை 24 உறுப்பினர்களைக் கொண்டது.

- ✯ தேசிய மக்கள் சக்தி - 07
- ✯ ஐக்கிய மக்கள் சக்தி - 05
- ✯ ஐக்கிய தேசியக் கட்சி -01
- ✯ சுயேச்சைக் குழு - 02
- ✯ இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் - 06
- ✯ ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - 01
- ✯ மக்கள் போராட்ட முன்னணி - 01
- ✯ ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு - 01

# சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்கில் இளைஞர்கள் முன்மாதிரி!

இலங்கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்தி, நாட்டின்பொருளாதாரத்தை அதிகரிக்க செய்யும் நோக்குடன் மூன்று இளைஞர்கள் யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து சுற்றுலாப் பயணம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த அலன்ரீன், கஜந்தன், ஜெரின் என்ற மூன்று இளைஞர்களுமே, நேற்று நல்லூர் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர் இந்தச் சுற்றுலா பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

இந்த சுற்றுலா பணயமானது 120 நாள்கள் கொண்டதாக அமைந்துள்ளது. இந்த இளைஞர்கள் 25 மாவட்டங்களுக்கும் சென்று அந்தந்த மாவட்டங்களில் உள்ள பிரசித்தி பெற்ற இடங்களை இனங்காட்டவுள்ளனர்.

தற்போது பொலுத்தீன் பாவனை மூலமாக சுற்றுப்புறச் சூழலானது மாசடைந்து வருகின்றது. அதனை தடுப்பதற்கு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாகவும் இந்த பயணம் இடம்பெறும் என்றும் தெரிவித்துள்ளனர்.

வான் ஒன்றை வீடாக மாற்றி, அந்த வானில் வீடு ஒன்றில் உள்ள அத்தியவசியமான தேவைகளை உள்ளடக்கி அந்த வானிலேயே இந்தப் பயணமானது ஆரம்பிக்கப்பட்டது.

இந்த பயணம் வெற்றிபெறுவதற்கு இந்த இளைஞர்கள் அனைவரது ஒத்துழைப்புகளையும் வேண்டி நிற்கின்றனர்.

## வல்வெட்டித்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று வல்வெட்டித்துறை நகர சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

16 உறுப்பினர்களைக் கொண்ட வல்வெட்டித்துறை நகர சபைக்கு நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 7 ஆசனங்களையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி 5 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 3 ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஓர் ஆசனத்தையும் கைப்பற்றின.

நகர பிதா பதவிக்காக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட திருமதி. தவமலர் சுரேந்திரநாதனுக்கு 7 பேரும், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட மகாலிங்கம் மயூரனுக்கு 6 பேரும் (தமிழரசு 5 + ஈ.பி.டி.பி. 1) ஆதரவு வழங்கினர்.

தேசிய மக்கள் சக்தியின் மூன்று உறுப்பினர்களும் வாக்களிப்பில் நடுநிலை வகித்தனர்.

துணை நகர பிதாவாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த நாகதம்பி பத்மநாதன் தெரிவானார்.

## வலிகாமம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று வலிகாமம் கிழக்கு பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

36 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 11 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 9 ஆசனங்களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியன தலா 5 ஆசனங்களையும், தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் சுயேச்சைக் குழு – 01 ஆகியன தலா இரண்டு ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் சுயேச்சைக் குழு – 02 ஆகியன தலா ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தன.

இன்றைய தவிசாளர் தெரிவுக்கான போட்டியில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் செல்வத்திசைநாயகம் தவநாயகமும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் தியாகராஜா நிரோஷ், தேசிய மக்கள் சக்தி சார்பில் சிவசுப்பிரமணியம் சுகிர்தரூபனும் முன்மொழியப்பட்டனர்.

தவிசாளரைத் தெரிவு செய்வது பகிரங்க வாக்கெடுப்பா அல்லது இரகசிய வாக்கெடுப்பா என உள்ளூராட்சி ஆணையாளரால் கோரப்பட்டபோது, தவிசாளர் தெரிவை இரகசிய வாக்கெடுப்பா, பகிரங்க வாக்கெடுப்பா என்பதை முடிவு செய்வதைக் கூட இரகசிய வாக்கெடுப்பு மூலம் தேசிய மக்கள் சக்தியினர் கோரிய நிலையில் சட்டதிட்டங்களின் பிரகாரம் அதனைச் செய்ய முடியாது என உள்ளூராட்சி ஆணையாளரால் நிராகரிக்கப்பட்டது.

அதையடுத்து இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியன பகிரங்க வாக்கெடுப்பையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தேசிய மக்கள் சக்தி ஆகியன இரகசிய வாக்கெடுப்பையும் கோரின. அதன்படி பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

தவிசாளர் பதவிக்காக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட தியாகராஜா நிரோஷ் 16 வாக்குகளையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில்போட்டியிட்டசெல்வத்திசைநாயகம் தவநாயகம் 11 வாக்குகளையும், தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட சிவசுப்பிரமணியம் சுகிர்தரூபன் 9 வாக்குகளையும் பெற்றனர். இந்நிலையில் முதலாவதாக வந்த வரைவிட ஏனைய இருவர்களின் வாக்குகளின் கூட்டுத் தொகை அதிக மாகக் காணப்பட்டதால் மூன்றாவதாக வந்த தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் சுகிர்தரூபன் போட்டியில் இருந்து நீக்கப்பட்டு ஏனைய இருவருக்கும் இரண்டாம் சுற்று வாக் கெடுப்பு நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

அதன்போது தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களில் ஒருவரைத் தவிர ஏனைய 8 உறுப்பினர்களும் பங்கேற்காது நடுநிலை வகிக்க இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் செல்வத்திசைநாயகம் தவநாயகமும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் தியாகராஜா நிரோஷும் மீண்டும் இரண்டாம் சுற்றில் களமிறங்கினர்.

அதையடுத்து தவிசாளருக்கான வாக்கெடுப்பு பகிரங்க வாக்கெடுப்பா அல்லது இரகசிய வாக்கெடுப்பா என உள்ளூராட்சி ஆணையாளரால் கோரப்பட்டபோது பகிரங்க வாக்கெடுப் புக்கும் இரகசிய வாக்கெடுப்புக்கும் சரிசமமாக14 வாக்குகள் கிடைத்ததால் திருவுளச்சீட்டின் பிரகாரம் இரகசிய வாக் கெடுப்பை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த வாக்கெடுப்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட தியாகராஜா நிரோஷ் 16 வாக்குகளையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட செல்வத்திசைநாயகம் தவநாயகம் 11 வாக்குகளையும் பெற்றனர். ஒரு வாக்கு செல்லுபடியற்ற வாக்காகப் பதியப்பட்டிருந்தது.

இதன்படி தவிசாளராக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த தியாகராஜா நிரோஷ் தெரிவானார்.

உப தவிசாளராக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த தர்மலிங்கம் ஜனார்த்தனன் தெரிவானார்.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் கடந்த தடவையும் தவிசாளராகத் தியாகராஜா நிரோஷ் பதவி வகித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கெஹலிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் இன்று காலை கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, அவரது மனைவி மற்றும் மகள் ஆகியோரைப் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இன்று மாலை உத்தரவிட்டுள்ளது.

வாக்குமூலம் வழங்குவதற்காக கெஹலிய ரம்புக்வெல குடும்பத்தினர் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் இன்று காலை முன்னிலையாகிய போது இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் இன்று மாலை கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

### செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம்:

# முழுமையான அகழ்வாய்வுடன் வெளிப்படைத் தன்மைஅவசியம்!

### ரவிகரன் எம்.பி. நாடாளுமன்றில் வலியுறுத்து

(விஜயரத்தினம் சரவணன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வாய்வுகள் முழுமையாக மேற்கொள்ளப்பட வேண்டும். அகழ்வாய்வுகளில் வெளிப்படைத்தன்மை அவசியம்.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை இறுதிக்கட்டயுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும், யுத்தக் குற்றங்களுக்கு இதுவரை உரிய வகையில் பொறுப்புக் கூறப்படவில்லை என்பதையும் இதன் போது சுட்டிக்காட்டினார்.

இந்த விடயத்தில் கடந்த அரசுகளைப் போலவே இந்த அரசும் செயற்பட்டு வருகிறது என்றும் நாடாளுமன்ற உறுப பினர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று (17) உரையாற்றுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் செம்மணி சிந்துபாத்தி மயான புதைகுழி அகழ்வுப் பணிகள் உரிய வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று இந்த உயரிய சபையில் வலியுறுத்துகின்றேன்.

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து இதுவரை 19 முழுமையான மனித எலும்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்தப் புதைகுழியை எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக 45 நாள்களுக்கு அகழ்வு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கான உத்தரவு நீதிமன்றத்தால் வழங்கப்பட்டிருக்கின்றது.

இந்தப் புதைகுழியை அகழ்வு செய்து உரிய வகையில் விசாரணைகளை மேற்கொண்டு உண்மை நிலைமைகள் கண்டறியப்படவேண்டும் எனவும், இந்த விடயத்தில் அரசுஉறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தப் புதைகுழியில் அடையாளம் காணப்பட்டுள்ள எலும்புக்கூடுகளை வைத்துப் பார்க்கும்போது சிறுவர்கள், பெண்கள் அடித்துக் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் வலுவடைந்துள்ளது.

இதனைவிட அடையாளம் காணப்பட்டுள்ள எலும்புக் கூடுகளில் ஆடைகள் அணிந்திருந்தமைக்கான சான்றிதழ்கள் இல்லை என்றும் கூறப்படுகின்றது. எனவே, இந்தச் சடலங்கள் நிர்வாணமாக புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. திட்டமிட்ட வகையில் படுகொலைகள் செய்யப்பட்ட பின்னர் சடலங்கள் இங்கு புதைக்கப்பட்



டிருக்கலாம் என்றே கருதவேண்டியுள்ளது.

செம்மணிப் பகுதியில் புதைகுழிகள் உள்ள விடயம் கடந்த 1999 ஆம் ஆண்டு வெளிப்படுத்தப்பட்டிருந்தது. கிருஷாந்தி குமாரசாமி கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்ட 6 இராணுவ வீரர்களுக்கு ட்ரயல் அட்பார் நீதிமன்றம் மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்திருந்தது. இதில் பிரதான சந்தேக நபரான இராணுவ லயன்ஸ் கோப்ரல் சோமரத்ன நீதிமன்றத் தீர்ப்பையடுத்து, செம்மணி பகுதியில் இராணுவத்தினரால் 600 பேர்வரையில் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டுள்ளனர் என்று தகவலை வெளிப்படுத்தியிருந்தார்.

இந்த விவகாரமானது அன்று பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. செம்மணியில் அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட விவகாரம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

இதனையடுத்து, செம்மணி புதைகுழி தோண்டும் நடவடிக்கை அன்று இடம்பெற்றிருந்தது. லயன்ஸ் கோப்ரல் சோமரத்ன அடையாளம் காட்டிய சில பகுதிகள் அந்தவேளையில் அகழப்பட்டன. அதில் 25 எலும்புக் கூடுகள் வரையில் மீட்கப்பட்டிருந்தன.

அதன்பின்னர் இந்த நடவடிக்கை கிடப்பில் போடப்பட்டது. தற்போது செம்மணி பகுதியில் அகழ்வு இடம்பெற்றதை அடுத்து மீண்டும் புதைகுழி ஒன்று அடையாளம் காணப்பட்டிருக்கின்றது.

கடந்த மூன்று தசாப்த காலமாக வடக்கு, கிழக்கில் இடம்பெற்ற கொடூர யுத்தம் காரணமாக லட்சக் கணக்கான தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டிருந்தனர். இறுதி யுத்தத்தின் போது பல்லாயிரக் கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர், ஆயிரக் கணக்கானவர்கள் காணாமலாக்கப்பட்டனர், ஆயிரக் கணக்கானவர்கள் படுகாயமடைந்திருந்தனர், தொண்ணூறாயிரம் பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர், ஒன்பதாயிரம் சிறுவர்கள் அனாதரவாக்கப்பட்டனர். இவ்வாறு பேரிழப்புகளைத் தமிழ் மக்கள் சந்தித்திருந்தனர்.

யுத்தகாலத்தில் இராணுவத் தரப்பினரால் பலவேறு பகுதிகளில் படுகொலைகள் அரங்கேற்றப்பட்டிருந்தன. யுத்தம் முடிவடைந்து தற்போது 16 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் பல இடங்களில் புதைகுழிகள் தோண்டப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில் இதுவரை 13 இடங்களில் புதைகுழிகள் இருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. இதில் பல இடங்களில் புதைகுழிகள் தோண்டப்பட்டுள்ளன.

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் 2013 ஆம் ஆண்டு புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. இந்தப் புதைகுழி அவ்வப்போது அகழப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டுவரை இந்தப் பணிகள் இடம்பெற்றிருந்தன.

இங்கு மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் அமெரிக்காவிலுள்ள புளோரிடா மாநிலத்துக்கு ஆய்வுக்காக அனுப்பப்பட்டிருந்தன. ஆனால், மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் மன்னர் காலத்தைச் சேர்ந்தவை என்று கூறப் பட்டிருந்தது. இதன் உண்மைத் தன்மை என்ன என்பது தொடர்பில் ஆராய்வதற்கு பின்னர் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இதேபோன்று மன்னார் நகரிலுள்ள ச.தொ.ச. கட்டடத்துக்கு அருகில் 2018 ஆம் ஆண்டு அகழ்வுப் பணி இடம்பெற்றபோது அங்கும் மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது. அந்தப் பகுதிகளிலும் அகழ்வுப் பணி இடம்பெற்றது. இந்த விவகாரம் தற்போதும் நீதிமன்றத்தில் உள்ளது.

முல்லைத்தீவு கொக்குத் தொடுவாய் பகுதியில் அகழ்வுப் பணி இடம்பெற்றபோது 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மனித புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாறு பல்வேறு இடங்களிலும் அகழ்வுப் பணிகள் இடம்பெறுகின்றபோது மனிதப் புதைகுழிகள் தென்படுகின்றமை வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில் வழமையான விடயமாக மாறிவிட்டது.

யுத்த காலத்தில் கொன்று குவிக்கப்பட்ட தமிழ் மக்கள் ஆங்காங்கே புதைக்கப்பட்டிருந்தனர். அந்தப் புதை குழிகளேதற்போதுவெளிப்பட்டுவருகின்றன.

செம்மணிப் பகுதியில் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள புதைகுழி தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். அகழ்வுப் பணிகள்உரிய வகையில் மேற்கொள்ளப்பட்டு எந்தக் காலப் பகுதியில் இந்தப் படுகொலைகள் இடம்பெற்றன, இதற்கு பொறுப்பானவர்கள் யார் என்ற விடயங்கள் கண்டறியப்பட வேண்டும்.

இறுதி யுத்தத்தின்போது பல்லாயிரக் கணக்கான மக்கள் காணாமல் போகச்

தொடர்ச்சி▼

# முழுமையான அகழ்வாய்வுடன் வெளிப்படைத் தன்மைஅவசியம்!

தொடர்ச்சி▲

செய்யப்பட்டுள்ளனர். படையினரிடம் சரணடைந்தவர்கள், படையினர்களிடம் உறவினர்களால் ஒப்படைக்கப்பட்டவர்கள், படையினரால் கைது செய்யப்பட்டவர்கள், படைத்தரப்பினரால் கடத்தப்பட்டவர்கள் எனப் பலரும் காணாமல் போகச் செய்யப்பட்டிருந்தனர். இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்ற விடயம் இதுவரை மர்மமாகவே உள்ளது.

இவ்வாறு காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டார்களா என்ற சந்தேகம் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் காணப்படுகின்றது.

இதேபோன்றே இறுதி யுத்தத்தின் போது பல்லாயிரக் கணக்கான மக்கள் கொன்று குவிக்கப்பட்டிருந்தனர்.

முள்ளிவாய்க்கால் பகுதியில் திறந்த நிலப் பரப்பில் இவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுக்கு வந்தபோது தாக்குதல்களில் பெருமளவானோர் பலியாகியிருந்தனர். இவ்வாறு பலியானவர்கள் அந்தந்த இடங்களிலேயேபுதைக்கப்பட்டிருந்தனர்.

செம்மணியில் இளைஞர், யுவதிகள் கொன்று புதைக்கப்பட்டமை, கிருஷாந்தி குமாரசுவாமி கொலை வழக்கின் இறுதியிலேயே தெரியவந்தது. ஆனாலும், அந்தப் புதைகுழிகள் தொடர்பில் அன்றைய காலப் பகுதியில் உரிய விசாரணைகள் நடத்தப்பட்டிருக்கவில்லை.

அந்தப் படுகொலைகளுக்கு காரணமானவர்கள் தண்டிக்கப் பட்டிருக்கவில்லை. அதன் பின்னணியில் செயற்பட்டவர்கள் குறித்த தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அன்று கிருஷாந்தி குமாரசாமியின் கொலை வழக்கின் பிரதான சந்தேக நபரான லான்ஸ் கோப்ரல் சோமரத்ன தகவலை வெளிப்படுத்தியிருக்காவிடின் செம்மணி புதைகுழி விவகாரம் வெளிவந்திருக்க மாட்டாது.

இந்தப் புதைகுழி விவகாரம் தொடர்பில் தகவல்கள் வெளிப் படுத்தப்பட்ட போதும் உரிய வகையில் புதைகுழிகள் அகழப்படாமையால்தான் தற்போது செம்மணியில் மீண்டும் புதைகுழி அடையாளம் காணப்பட்டிருக்கிறது.

வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில் பல்வேறு இடங்களில் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அந்தப் புதைகுழிகள் தொடர்பில் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

தற்போது செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதைகுழியில் பெரும் எண்ணிக்கையானோர் கொன்று புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது.

இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணியில் 19 எலும்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதில் சிறுவர்கள், பெண்கள் ஆகியோரின் எலும்புக் கூடுகளும் இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

எனவே, இந்தப் புதைகுழி அகழ்வுக்கான சகல ஏற்பாடுகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும். இதற்கான சகல ஒத்துழைப்புகளையும் அரசு வழங்க வேண்டும். அகழ்வுச் செயற்பாட்டை நிறுத்தாது இதனை முழுமைப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும், யுத்தக் குற்றங்கள் தொடர்பில் இன்னமும் உரிய வகையில் பொறுப்புக் கூறப்படவில்லை. தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசும் அந்த விடயத்தில் கடந்த அரசுகளைப் போன்றே செயற்பட்டு வருகின்றது. இந்த புதைகுழி விவகாரத்தில் அரசு வெளிப்படைத் தன்மையுடன் செயற்படவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன். - என்றார்.

# நுகர்வோரின் கோரிக்கைக்கு அமைய மின் கட்டண பட்டியல்கள் வழங்கப்படும்

## எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி தெரிவிப்பு

மின்சார கட்டண பட்டியலைக் குறுஞ் செய்தி சேவை மூலம் பெறும் வசதி இல்லாத நுகர்வோருக்கு அவர்களின் கோரிக்கையின் பேரில் மின் கட்டண பட்டியல் வழங்கப்படும் என்று எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

எந்தவொரு மின் நுகர்வோருக்கும் உடனடியாக மின்சாரம் துண்டிக்கப்படாது என்றும் அவர் நேற்று நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

உரிய காலத்துக்குள் மின் கட்டணம் செலுத்தப்படாவிட்டால், ஒரு மாதம் மற்றும் 16 நாள்களின் பின்னர் மின்சாரம் துண்டிக்கப்படும் என்று பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வின் போது, கொழும்பு மாவட்ட உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக அமைச்சர் இதனை கூறினார்.

குறுஞ்செய்தி சேவை மூலம் மின் கட்டணத்தை வழங்கும் நடைமுறை இரண்டு வருடங்களாக முன்னெடுக்கப்படுகிறது. எனினும் 2.9 சதவீத மின்சார நுகர்வோர் குறுஞ்செய்தி பெற பதிவு செய்யப்படவில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

குறுஞ்செய்தி சேவை செயல்பாட்டில் இருக்கும்போது தொலைபேசி அழைப்பு விடுப்பதால் கூடுதல் செலவுகள் மற்றும் ஊழியர்கள் தேவை ஏற்படும். இதனால் இது தேவைக்கேற்ப பரிசீலிக்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# 70 வயது காதலியின் நகைகளுடன் 30 வயது காதலன் தப்பியோட்டம்!

70 வயது பெண்ணொருவரின் ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையடித்த சம்பவத்துக்கு உதவி செய்த 24 வயதுடைய இளைஞர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பெண்ணின் தங்க நகைகளை 30 வயதுடைய காதலன் கொள்ளையடித்துத் தப்பிச் சென்றுள்ளார் என்று அநுராதபுரம் - வாஹல்கட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் வாஹல்கட பிரதேசத்தில் குளத்தில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுபவர் என்று விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாஹல்கட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நாதியற்ற ஐ.நா. கவுன்ஸில்

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் விடயங்களைத் தொடர்ந்து மனித உரிமைகள், பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், நல்லாட்சி, அரசமைப்பு சீர்திருத்தம் ஆகியன குறித்து வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இலங்கை அரசாங்கம் சிறிதளவு முன்னேற்றத்தையே கண்டுள்ளமை குறித்து தாங்கள் கரிசனை கொண்டுள்ளன என இணைத்தலைமை நாடுகள் தெரிவித்துள்ளன.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை விடயத்தைக் கையாண்டு வரும் இணைத் தலைமை நாடுகளின் சார்பில் இங்கிலாந்தின் மனித உரிமைகளிற்கான தூதுவர் எலினோர் சான்டெர்ஸ் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளிற்கான உயர்ஸ்தானிகரின் வருடாந்த அறிக்கை மீதான உரையாடலிற்காக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையிலேயே இலங்கை தனது கடப்பாடுகளில் சிறிதளவு முன்னேற்றத்தையே வெளிப்படுத்தியுள்ளது என்று குறை கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கவனிக்கத் தக்க விடயங்கள் உள்ளன.

✯ இலங்கையில் மேமாதம் தேர்தல்கள் நடாத்தப்பட்டமையை வரவேற் கின்றோம்.

✯ 2009ம் ஆண்டு ஆயுதமோதலின் போது இழக்கப்பட்ட உயிர்களை நினைவு கூர்வது இம்முறை அமைதியான விதத்தில் இடம்பெற்றமையை நாங்கள் கவனத்தில் எடுத்துள்ளோம்.

✯ நீண்டகாலமாக நிலவும் தண்டனை விலக்களிப்புக்கு அரசாங்கம் தீர்வைக் காணவேண்டும் என வலியுறுத்துகின்றோம். மேலும் ஊடகவியலாளர்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள், சிவில் சமூகத்தினர் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் செயற்படகூடிய நிலையை ஏற்படுத்துமாறு நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

✯ அனைவரையும் உள்ளடக்கிய முழுமையான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயல்முறையும் பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையை பெறுவதும் மிகவும் முக்கியமானது.

✯ பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவதே தனது நிலைப்பாடு என அரசாங்கம் தெரிவித்துள்ள போதிலும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைத் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவது குறித்து நாங்கள் கரிசனை கொண்டுள்ளோம்.

✯ காணாமல்போனோர் அலுவலகத்தை மீண்டும் வலுப்படுத்துவதன் மூலம் பலவந்தமாகக் காணாமலாக்கப் பட்டோர் தொடர்பில் தீர்க்கப்படாத விடயங்களை தீர்க்குமாறு நாங்கள் அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம்.

- என்று அதில் உள்ளது.

இந்த விடயங்களையே நேற்று யாழ்ப்பாணத்தில் தம்மைச் சந்தித்த இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் அன்ட்ரூ பற்றிக்கும் தம்மிடம் தெரிவித்தார் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சுமந்திரன் குறிப்பிட்டார்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்குத் தான் அளித்த வாக்குறுதிகளை இலங்கை நிறைவேற்றவில்லை என்பது தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் இன்னும் எவ்வளவு காலத்துக்கு இப்படிக் குறை கூறி பிரலாபித்துக் கொண்டிருக்கப் போகின்றது என்பது தெரியவில்லை. காத்திரமான நடவடிக்கை எடுக்காமல், இப்படி இலங்கை மீது தொடர்ந்து குறை சொல்லிப் புரணி பாடிக் கொண்டிருப்பதை தவிர, ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலுக்கு வேறு ஏதும் நாதி இருப்பதாகத் தெரியவில்லை என்றே தோன்றுகின்றது.





# வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கபட்ட பயனாளிகளுக்கு இழப்பீடு வழங்கல்

(பாறுக் ஷிஹான்)

கடந்த வெள்ள அனர்த்தத்தால் வீடுகள், தொழில் ரீதியாக பெரியளவில் பாதிக்கப்பட்ட பயனாளிகளுக்கு முதற் கட்டமாக இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வானது சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ஆசீக் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா விடுத்த கோரிக்கைக்கு அமைய இடம்பெற்றது.

கடந்த வெள்ள அனர்த்தத்தால் வீடுகள், தொழில் ரீதியாக பாரியளவில் பாதிக்கபட்ட பயனாளிகளுக்கு முதற் கட்டமாக இந்த இழப்பீடு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் இலங்கை அரசமைப்புப் பேரவை உறுப்பினரும் அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு காசோலைகளை வழங்கி வைத்தார்.

உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முவஃபிக்கா, கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, நிர்வாக கிராம உத்தியோகத்தர் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.





# எரிபொருள் பௌசர் - ஓட்டோ விபத்து சம்பவ இடத்தில் வைத்தியர் உயிரிழப்பு!

## சேருவில தங்கநகர் பகுதியில் சம்பவம்








சேருநுவர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தங்கநகர் பகுதியில் எரிபொருள் பௌசருடன் ஓட்டோ மோதி விபத்துக்குள்ளானதில் வைத்தியர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்துச் சம்பவம் நேற்று (17) இரவு இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை – மட்டக்களப்பு பிரதான வீதியின் தங்கநகர் பகுதியில் சேருவில பகுதியில் இருந்து தோப்பூர் நோக்கி பயணித்த ஓட்டோ எதிர் திசையில் வந்த எரிபொருள் பௌசருடன் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

எதிர் திசையில் அதே பக்கத்தில் சைக்கிளிரல் வந்த நபருடன் விபத்து ஏற்படுவதை தவிர்க்கும் முகமாக மறுபக்கத்துக்கு ஓட்டோவைச் செலுத்த முற்படுகையிலேயே எதிர் திசையில் வந்த எரிபொருள் பௌசருடன் மோதி விபத்து இடம்பெற்றுள்து என்று தெரியவிக்கப்படுகின்றது.

விபத்தில் ஓட்டோவில் பயணித்த வைத்தியர் உயிரிழந்துள்ளதுடன் மற்றவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சைக்கிளில் பயணித்தவரும் காயங்களுக்கு உள்ளான நிலையில் மூதூர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

உயிரிழந்தவர் சேருவில வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் கெல்வின் (வயது 59) எனவும் படுகாயமடைந்தவர் தோப்பூரைச் சேர்ந்த அவருடைய நெருங்கிய உதவியாளர் என்.லாபீர் (வயது 55) எனவும் தெரிய வருகின்றது.

# நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு கூடுதலாக மருந்து விற்பனை செய்தவர்கள் கைது!

நிர்ணயிக்கப்பட்ட விலைக்கும் கூடுதலான விலைக்கு மருந்துகளை விற்பனை செய்த சிறப்பு மருத்துவர் ஒருவர் உள்ளிட்ட குழுவினர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர மருத்துவமனையில் பணியாற்றும் சிறப்பு மருத்துவ நிபுணரான பெண் ஒருவரும், மேலும் இரண்டு பேரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூன்றாம் தரப்பினர் ஊடாக மருந்துகளைக் கூடுதல் விலைக்கு விற்பனை செய்ததாக இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்ட இவர்களைக் கொழும்பு மேலதிக மஜிஸ்திரேட் ஹர்ஷண கெகுலாவல முன்னிலையில் முன்னிலை செய்தபோது அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, எதிர்வரும் 24 ஆம் திகதிவரை அவர்களை விளக்கமறியல் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.







# களுத்துறை மாவட்ட மக்களை சந்தித்த பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்!

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

தென்னிலங்கையின் காலி, களுத்துறை, மாத்தறை போன்ற மாவட்டங்களில் தோட்டப் புறங்களில் வாழும் மலையக மக்கள் கடந்த ஆட்சி காலங்களில் ஒரு நிரந்தர அரசியல் தலைமைத்துவம் இன்மையால் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் அடிப்படை தேவைகளைக் கூட பூர்த்தி செய்து கொள்ள முடியாத மிகவும் பின் தள்ளப்பட்டவர்களாகவே இருந்து வருகின்றனர்.

இந்த நிலையில் தேசிய மக்கள் சக்தி அரசு மலையக மக்கள் தொடர்பில் கவனம் செலுத்துகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை பின் தள்ளப்பட்ட மாவட்டங்களில் வாழும் மலையக மக்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி வருகின்றது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் களுத்துறை மாவட்டம் ஹொரான பிரதேச சபைக்கு உட்பட்ட றைகம தோட்டம், புளத் சிங்கள ஹல்வத்துறை தோட்டப்புற மக்களை நேரில் சந்தித்து அவர்களின் பிரச்சனைகள் குறித்து விரிவாக கலந்துரையாடினார்.



அது சம்பந்தமான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

களுத்துறை மாவட்ட ஹொரான தேர்தல் தொகுதியில் அமைந்துள்ள சரஸ்வதி கனிஷ்ட வித்யாலயாலயம், ஹல்வத்துறை தமிழ் வித்தியாலயம், விபுலானந்தா தமிழ் பாடசாலைகளை சார்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களைச் சந்தித்து அவர்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

களுத்துறை மாவட்டத்தில் உள்ள பெருந்தோட்ட பாடசாலைகளில் கல்வி சார், மற்றும் பௌதிக மனிதவள பிரச்சினைகள் குறித்து முழுமையாக ஆராய்ந்தார். முழு மலையக கல்விசார் பிரச்சினைகளுடன் ஒப்பிடும்போது மேல் மாகணத்தில் உள்ள களுத்துறை மாவட்ட தோட்ட பகுதிகளில் அமைந்துள்ள பாடசாலைகளில் பிரச்சினைகள் மிக மோசமான நிலைமை காணப்படுகின்றன என்று பிரதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த மக்கள் சந்திப்பின் போது களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒஷானி உமாங்க ஹொரான, பிரதேச சபை தலைவர் நிர்மல, பிரதேச உறுப்பினர் துஷாந்த் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GSM
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998






# வியட்நாமில் மல்யுத்தச் சம்பியன்சிப்; இலங்கை சார்பாக இரண்டு வீரர்கள்!

(பழுவூரான்)

வியட்நாமில் நடைபெறும் ஆசிய சம்பியன்சிப் போட்டியில் இலங்கை அணி சார்பாக கலந்து கொள்ளும் வீரர்களான சிவகுமார் கௌதம், ரெல்சன் ருகேஷ்நாத் மற்றும் அனுசரணை வழங்கிய சோமசுந்தரம் கோபிகிஸ்ணா ஆகியோரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லடி துளசி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நொச்சிமுனை சாண்டோ சங்கர தாஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய இந்த நிகழ்வு விளையாட்டுக் கழகத் தலைவர் ஸ்ரீ பார்த்தீபன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டீனா முரளிதரன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன், மட்டக்களப்பு மாநகர முதல்வர் சிவம் பாக்கியநாதன், முன்னாள் மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், மண்முனை தென் எருவில்பற்றுப் பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் போரதீவுப்பற்றுப் பிரதேச சபைத் தவிசாளர்கள் உட்பட மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர்கள், மட்டக்களப்பு கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.குகதாசன், விளையாட்டு வீரர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மாகாண மட்டம் மற்றும் தேசிய மட்ட மல்யுத்தப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு அதிதிகளால் பதக்கம் அணிவிக்கப்பட்டு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதான அனுசரணையாளரான சோமசுந்தரம் கோபிகிஸ்ணா அதிதிகளால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

அத்தோடு அனுசரணையாளரால் விளையாட்டில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு 13 லட்சம் ரூபாவுக்கான காசோலையும் வழங்கப்பட்டது.









# உள ஆற்றுப்படுத்தல் தேவைப்பாடு யாழில் அதிகம் உணரப்பட்டுள்ளது!

## யாழ். மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் தற்போது உள ஆற்றுப்படுத்தலின் தேவைப்பாடுகள் அதிகம் உணரப்பட்டுள்ளது. பாடசாலைகளிலும் உளவளத்துணையின் செயற்பாடுகளின் தேவைப்பாடு உள்ளது.

இவ்வாறு யாழ். மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

உளவளத்துணை மற்றும் உள சமூக பணிகளை மேற்கொள்ளும் அரச மற்றும் அரச சாபற்ற நிறுவனங்களுக்கு இடையிலான உளசமூக மன்ற கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது தலைமையுரை ஆற்றுகையில் மாவட்ட செயலர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் யுத்தம் முடிவடைந்த பின்னரான பாரிய தேவைப்பாடு ஏற்பட்டது. அதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்டுவரும் பங்களிப்புக் காத்திரமானது.

தற்போது உள ஆற்றுப்படுத்தலின் தேவைப்பாடுகள் அதிகம் உணரப்பட்டுள்ளன. பாடசாலைகளிலும் உளவளத்துணையின் செயற்பாடுகள் தேவைப்பாடு உள்ளது.

அதற்குக் கூட்டுப் பொறுப்புடன் அனைவரும் ஒன்றிணைந்து பிரச்சினைகளை அடையாளப்படுத்தி அதற்கான தீர்வுகளைக் காண வேண்டும்.

இந்தக் கலந்துரையாடலில் நோக்கமானது, உளவளத்துணை மற்றும் உளசமூகப் பணிகளை இணைந்த வகையில் மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதே.

இந்த வேலைகளில் காணப்படும் இடைவெளிகளை இனங்கண்டு உள நலத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான கலந்துரையாடலாக அமைய வேண்டும்.– என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் உதவி மாவட்ட செயலாளர் உ.தர்சினி, யாழ்ப்பாண பல்கலைக்கழக உளவியல் மற்றும் மெய்யியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க.கஜவிந்தன், தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பரா. நந்தகுமார், உள மருத்தவ வைத்திய அதிகாரி அ. வினோதா, மாவட்ட உளவளத் துணை இணைப்பாளர் ந.உதயகுமார் , அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், வலயக்கல்வி அலுவலக ஆலோசகர்கள், ஆசிரியர்கள், பிரதேச செயலக உளவளத்துணை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# கொழும்பு மாநகர சபையின் உறுப்பினர் மீது தாக்குதல்!

கொழும்பு மாநகர சபை உறுப்பினர் சந்தமாலி உலுவிடகே மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த அவர், சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த கொழும்பு மாநகர சபை உறுப்பினரான சந்தமாலி உலுவிடகே, கொழும்பு மாநகர சபை கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டுத் தனது அலுவலகத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்த போதே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக திஸாநாயக்க கடமையில்!

(அபு அலா )

கிழக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு, சமூக நலன்புரிச் சேவைகள், கிராமிய மின்சார அமைச்சின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவை விசேட தர அதிகாரி எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ. திஸாநாயக்க தனது கடமையை இன்று (18) பொறுப்பேற்றார்.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகரவினால் நேற்று (17) அவருக்கான கடிதம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அமைச்சின் உதவிச் செயலாளர் எஸ்.கரன், சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்கள மாகாண ஆணையாளர் திருமதி றிஸ்வானி றிபாஸ், அமைச்சின் நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.எம்.றியாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



இலங்கை நிர்வாக சேவையின் மூத்த அதிகாரியான இவர், கிழக்கு மாகாண விவசாய நீர்ப்பாசன, கால் நடை உற்பத்தி அபிவிருத்தி, மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி உணவு வழங்கலும் விநியோகத்துக்குமான அமைச்சின் செயலாளராகப் பதவி வகித்த நிலைமையிலேயே இவருக்கான இந்த நஜயமனம் வழங்கி வைக்கப்பட்டது.

இவர், கிழக்கு மாகாணத்தின் பல்வேறு திணைக்களங்கள், பிரதிப் பிரதம செயலாளர் மற்றும் பல அமைச்சுக்களின் செயலாளர் பதவிகளில் வினைத்திறன் மிக்க அதிகாரியாகவும், சிறந்த வழிகாட்டுதல்கள், நிர்வாக மற்றும் முகாமைத்துவ செயற்பாட்டு திறமைகள் என்பவற்றைக் கருத்தில் கொண்டே இந்த அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.







# நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய திருவிழா முன்னாயத்தக் கலந்துரையாடல்

## யாழ். மாவட்ட அரச அதிபர் தலைமையில் நேற்று நடந்தது



நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில் பெருந் திருவிழா தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நயினாதீவு நாக பூஷணி அம்மன் கோவில் பெருந் திருவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம் ஜூலை 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

கடந்த வருட திருவிழா ஏற்பாடுகளில் கற்றுக் கொண்ட பாடத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த முறை திருவிழாவை மேலும் சிறப்பாக நடத்த அனைவரின் ஒத்துழைப்பும் கோரப்பட்டுள்ளது.

நயினாதீவில் மூழ்கிய கடற்பாதையால் கடற் போக்குவரத்துக்கு ஏற்பட்டுள்ள இடையூறைத் தவிர்ப்பதற்காக ஒரு பகுதியை கடற்படையின் ஒத்துழைப்புடன் அகற்றுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் குடி தண்ணீர் தேவைகள், ஆலயத்துக்கு வரும் பக்தர்கள், அமுத சுரபி மண்டபம் மற்றும் மருத்துவ சிகிச்சை நிலையத்துக்குத் தேவையான அளவு குடி தண்ணீரைச் சீராக வழங்கல் தொடர்பில் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடன் கலந்துரையாடப்பட்டது.

திருவிழா காலத்தில் பக்தர்களின் பாதுகாப்புக்கு 50 பொலிஸ் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தவது எனவும், சப்பறம், தேர், தீர்த்தம் மற்றும் பூங்காவன உற்சவங்கள் ஆகிய தினங்களில் மேலும் 50 பொலிஸ் உத்தியோகத்தர்களைச் சேவையில் ஈடுபடுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஆலயத்துக்கு அருகிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதியை நிரந்தரமாகப் புனரமைப்பதற்கு முன்பாக தற்காலிகமாக சீர் செய்ய நடவடிக்கை எடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

திருவிழாக் காலங்களில் வழமை போல் யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் இருந்து குறிகட்டுவான் வரையிலான இலங்கை போக்குவரத்து சேவை காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும். விசேட திருவிழாவான சப்பறம், தேர் மற்றும் தீர்த்த நாள்களில் காலை 4.30 மணியிலிருந்து ஆரம்பமாகும் எனவும் ஒவ்வொரு அரை மணித்தியாலங்களுக்கும் சேவை இடம் பெறும் என்றும் முடிவு எட்டப்பட்டது.

குறிகட்டுவானில் இருந்து ஆலயம் செல்வதற்கான படகு போக்குவரத்து ஒரு வழிக் கட்டணம் 80 ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு கடற்போக்குவரத்து (படகு) நேரத்துக்கு அமைய தனியார் போக்குவரத்து மற்றும் இலங்கை போக்குவரத்து பஸ் சேவை நடைபெறவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

திருவிழா காலங்களில் நயினாதீவு கிராமங்களில் திருடர்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் நடமாடும் சேவையை ஈடுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாசகம் பெறுவோர் மற்றும் சிறுவர்கள் வியாபாரத்தில் ஈடுபடுத்துவதைக் கண்காணிப்பதற்குச் சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர், நன்னடத்தை உத்தியோகத்தர், உளவளத்துணை உத்தியோகத்தர், கலாசார உத்தியோகத்தர் உள்ளடங்கிய வகையில் உத்தியோகத்தர்கள் கண்காணிப்பு கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

குறிகட்டுவான் துறைமுகத்தின் உள்நுழைவு வரை வாகனங்கள் தரித்து நிற்பதைத் தடுப்பது, ஆலயத்துக்கு முன்பாகவுள்ள கடைகளை அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் வேறு பொருத்தமான இடத்தில் மாற்றுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

நயினாதீவுக்கு எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் ஜூலை 12 ஆம் திகதி வரை கட்டடப் பொருள்களைக் குறிப்பாக கல் மற்றும் மணல் என்பவற்றை எடுத்துச் செல்வதை முற்றாகத் தடை செய்வது எனவும், தொடர்ந்து எதிர்காலத்தில் கட்டடப் பொருள்களை நயினாதீவு வங்களாவடி துறைமுகத்தின் ஊடாகக் கொண்டு செல்வதற்கு ஏதுவாக பிரதேச செயலாளர், பிரதேச சபைச் செயலாளர், வீதி அபிவிருத்தி திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, படகுச் சங்கம், ஆலய அறக்காவலர் சபையினர் மற்றும் பொது அமைப்புகள் ஆய்வு செய்து இறுதி தீர்மானம் எடுப்பது எனவும் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் நயினாதீவில் மதுபான விற்பனையை மதுவரித்திணைக்கள நடமாடும் சேவையூடாக கண்காணிப்பது எனவும், விற்பனை செய்தால் சட்ட நடவடிக்கைகளை எடுப்பது எனவும், பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை அமுதசுரபி அன்னதான சபையால் மதிய உணவு, இரவு உணவு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. ஸ்ரீமோகனன், உதவி மாவட்டச் செயலாளர் உ. தர்சினி, நாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் பரமலிங்கம், வேலணைப் பிரதேச செயலாளர் சிவகரன், சுகாதார வைத்திய அதிகாரிகள், இலங்கை போக்குவரத்து சபை அதிகாரிகள், கடற்படை அதிகாரி, பொலிஸ் உத்தியோகத்தர்கள், பிரதேச சபை செயலாளர், வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள், மதுவரித் திணைக்கள அதிகாரிகள், துறைசார் திணைக்கள தலைவர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# இஸ்ரேல் - ஈரான் படையியல் ஒப்பீடு: பொருளாதார ஆதிக்கத்துக்கான போர் ?

● ஐங்கரன் விக்கினேஸ்வரா.

(ஈரானை அமெரிக்கா, பிரிட்டன், இஸ்ரேல் முக்கூட்டு குறிவைத்து தாக்கி வருகிறதே ஒழிய, அணு ஆயுத தயாரிப்பு என்பதெல்லாம் ஒரு கண்துடைப்பு தான். நீண்டகால பொருளாதர ஆதிக்கம் காரணமாகவே அவசரமாக இந்த போர் மேற்குலக நாடுகளின் உந்து தலால் தொடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.)

ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதல், மத்திய கிழக்குப் போரை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியுள்ளது என்றாலும், இந்த இரண்டு நாடுகளும் நிரந்தர எதிரிகளாக வரலாற்றில் இருந்ததில்லை. இன்னும் சொல்லப் போனால், பொது எதிரிக்காக இரு நாடுகளும் கைகோர்த்த சம்பவமும் பல நிகழ்ந்துள்ளது.

இஸ்ரேல்-ஈரான் இடையே தீவிர போர் பதற்றங்கள் அதிகரித்துவரும் நிலையில், மத்திய கிழக்குக் பகுதி எப்போதும் போல் கொந்தளிப்பாகவே உள்ளது. பலரும் நினைப்பது போல் இரு நாடுகளும் வரலாற்று எதிரிகள் அல்ல. பல காலம் நட்புடனும் இருந்துள்ளன.

மத்திய கிழக்கில் மீண்டும் ஒரு பாரிய மோதல் பற்றிய அச்சம் எழுந்துள்ளது. இந்த நிலையில் இஸ்ரேல் மற்றும் ஈரான், இரண்டு நாடுகளில், எந்த நாட்டின் இராணுவம் பலம் மிக்கது என்ற கேள்வியும் எழுகிறது.

இரு நாட்டு இராணுவத்தின் தாக்கும் திறனை ஒப்பிட்டு, பல்வேறு அதிகார பூர்வ மற்றும் இணையத்தில் கிடைக்கும் முறைகளைப் பயன்படுத்தி ராணுவ வலிமை மதிப்பிடப்படுகிறது.

### அன்று நண்பன் இன்று பகைவன்

இஸ்ரேல் மீதான ஈரானின் தாக்குதல், போரை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியுள்ளது என்றாலும், இந்த இரண்டு நாடுகளும் நிரந்தர எதிரிகளாக இருந்ததில்லை.

இன்னும் சொல்லப்போனால், பொது எதிரிக்காக இருவரும் கைகோர்த்த சம்பவமும் பல நிகழ்ந்துள்ளது. 1960களில், இஸ்ரேலும், ஈரானும் ஈராக்குக்கு எதிராக இணைந்து செயற்பட்டன.

விரோதப் போக்கு கொண்ட அரபு ஆட்சிகளுக்கு எதிராக இஸ்ரேல் ஒரு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கையில், ஈரான், அதன் கடைசி மன்னரான ஷா என அழைக்கப் படும் முகமது ரெசா பஹ்லவியின் ஆட்சியில் இருந்தது. ஈராக் பொது எதிரியாகவே, இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட் மற்றும் ஈரானின் உளவு அமைப்பான சாவக் ஆகியவை மத்திய ஈராக்கிய ஆட்சிக்கு எதிராக குர்திஷ் கிளர்ச்சியாளர்களுக்கு ஊக்கமளிப்பதில் முக்கிய பங்காற்றின.

| |  |  |
|---|---|---|
| மக்கள் தொகை | 96 லட்சம் | 8.86 கோடி |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி (அமெரிக்க டாலர்களில்) | 525 பில்லியன் | 413 பில்லியன் |
| தனிநபர் ஜிடிபி (அமெரிக்க டாலர்களில்) | 54,931 | 4,669 |
| பாதுக்காப்பு துறை பட்ஜெட் (அமெரிக்க டாலர்களில்) | 19 பில்லியன் | 7.4 பில்லியன் |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பாதுகாப்பு துறையின் விகிதம் | 4% | 2% |

மேலும், இஸ்ரேல், ஈரான், துருக்கி ஆகிய நாடுகளை உள்ளடக்கிய முத்தரப்பு உளவு கூட்டணியை உருவாக்கின. ஷாவின் ஆட்சியின் இறுதிக் காலம்வரை இந்த உறவு அழுத்தமாக நீடித்தது.

### இஸ்ரேல் - ஈரான் ஓர் ஒப்பீடு

ஈரான் இஸ்ரேலை விடப் பலமடங்கு பெரிய நாடு. அதன் மக்கள் தொகை கிட்டத்தட்ட ஒன்பது கோடி. இது இஸ்ரேலின் மக்கள் தொகையான ஒரு கோடியைவிட பல மடங்கு அதிகமாகும்.

கடந்த 2023 ஆண்டில் ஈரானின் பாதுகாப்பு பட்ஜெட் சுமார் 740 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்தது. ஆனால் இஸ்ரேலின் பாதுகாப்பு பட்ஜெட் அதைவிட இருமடங்காக இருந்தது. அதாவது 1,900 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்தது.

இஸ்ரேலின் பாதுகாப்புச் செலவு, அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடும்போது ஈரானைவிட இரட்டிப்பாகும்.

சமீபத்திய புள்ளி விவரங்களின்படி இஸ்ரேல் – ஈரான் இராணுவ பலம் ஒப்பீடுகளின்படி ஈரான், இஸ்ரேலைவிட ஆறு மடங்கு அதிகமான இராணுவ வீரர்களைக் கொண்டுள்ளது. ஈரானிடம் 6 லட்சம் ராணுவ வீரர்கள் உள்ளனர். இஸ்ரேலிடம் ஒரு லட்சம்

தொடர்ச்சி▼



# இஸ்ரேல் - ஈரான் படையியல் ஒப்பீடு: பொருளாதார ஆதிக்கத்துக்கான போர் ?

தொடர்ச்சி▲

வீரர்கள் உள்ளனர்.

அத்துடன் இஸ்ரேலிடம் 3,501 டாங்கிகள், 64 கடற்படையில் போர் கப்பல்கள், 3,106 ஏவுகணைகள், 460 போர் விமானங்கள் - ஹெலிகொப்டர்கள் உடன் 48 நில வான் ஏவுகணைகளைக் கொண்டுள் ளது.

ஆயினும் ஈரானிடம் போரிடும் 1,613 டாங்கிகள், 261 கடற்படையில் போர் கப்பல்கள், 1,491 ஏவுகணை களை மட்டுமே கொண்டுள்ளது. அத்துடன் ஈரான் 336 போர் விமானங்கள், ஹெலிகொப்டர்களையும், 279 நில வான் ஏவுகணைகளையும் வைத்துள்ளது.

### அணு ஆயுத பலம்

இஸ்ரேல் அதன் சொந்த அணு ஆயுதங்களைக் கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது. ஆனால் இதுபற்றி அந்த நாடு தெளிவாக ஒருபோதும் கூறுவதில்லை.

ஈரானிடம் அணு ஆயுதங்கள் இருப்பதாக குற்றச்சாட்டுகள் இருந்தாலும், அந்த நாடு அணு ஆயுதங்கள் உருவாக்குவதற்குத் தனது அணு சக்தித் திட்டத்தைப் பயன்படுத்த முயல்வதாக வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை எப்போதும் மறுக்கிறது.

### அமெரிக்காவின் நிலைப்பாடு

எப்போதும் இஸ்ரேல் சார்பான அமெரிக்காவின் நிலைப்பாடு ஒரு போதும் மாறுவதில்லை.

லெபனானில் 1983 இல் ஹிஸ்புல்லா இயக்கத்தின ரின் வெடிகுண்டு தாக்குதலில் அமெரிக்க கடற்படையினர் 241 பேர், பிரெஞ்சு படையினர் 58 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தின் பின்னர் ஈரானை எதிர்க்க, இஸ்ரேலுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அமெரிக்க உறுதியாக வழங்கி வருகிறது.

### ஈரானின் எண்ணெய் வளம்

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள எண்ணெய் வளமிக்க பகுதிகளை ஒவ்வொன்றாக மேற்கத்திய நாடுகள் ஆக்கிரமித்துள்ளன. 2012 இல் லிபியாவையும், அதன் முன்பாக ஈராக்கையும் கைப்பற்றியதை போல தற்போது ஈரானை கைப்பற்ற முயல்கின்றன.

மேலும் சிரியா, ஏமன் போன்ற நாடுகளின் மீதும் ஆதிக்கம் தொடுப்பதற்கான காரணம் அதன் அடியில் உள்ள எண்ணெய் வளத்தை சூறையாடுவதுதான்.

ஈரானின் வசம் சுமார் 16 ஆயிரம் கோடி பீப்பாய்கள் எண்ணெய் வளம் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. உலக எண்ணெய் வளத்தில் கிட்டத்தட்ட 10 வீதம் ஈரானின் வசம் இருக்கிறது. வெனிசுலா, சவூதி அரேபியா



மற்றும் கனடா ஆகிய நாடுகளின் வரிசையில் அதிக எண்ணெய் வளம் கொண்ட நான்காவது நாடாக ஈரான் உள்ளது.

புதிய கண்டுபிடிப்புகள் ஈரானை முதலிடத்துக்குக் கொண்டு செல்லும் வாய்ப்பு உள்ளது. இயற்கை எரிவாயு இருப்பில் ஈரான் முதலிடத்தில் இருக்கிறது. உலக இருப்பில் 18 வீதம் இயற்கை எரிவாயு ஈரான் வசம் உள்ளது. அத்துடன் எண்ணெய் உற்பத்தியில் ஈரான் தான் தற்போது முதலிடத்தில் இருக்கிறது. ஒரு நாளைக்கு சராசரியாக 10 ஆயிரம் பீப்பாய்கள் கச்சா எண்ணெய் ஈரானின் வயல்களில் இருந்து எடுக் கப்படுகிறது.

இவை தவிர வளைகுடா நாடுகளில் மட்டும் உலகில் உள்ள எண்ணெய் வளங்களில் 55 சதவீத முதல் 57 சதவீதம்வரை இருக்கிறது. ஈரான் மத்திய கிழக்கு நாடுகளில் வலுமிக்க ஒரு நாடாக வரலாற்று வேர்களுடன் இருக்கிறது. மக்கள் தொகையிலும் சரி, பரப்பளவிலும் சரி உலக அளவில் 17 ஆவது இடத்திலும், ஆசிய கண்டத்தில் ஆறாவது பெரிய நாடாகவும் இருக்கிறது. மற்ற வளைகுடா நாடுகளை விட அதிக அளவு மலைப்பாங்கான பகுதிகளையும் ஈரான் தன்னகத்தே கொண்டுள்ளது.

இதனால் தான் ஈரானை அமெரிக்க, பிரிட்டன், இஸ்ரேல் முக்கூட்டு குறிவைத்து தாக்கி வருகிறதே ஒழிய, அணு ஆயுத தயாரிப்பு என்பதெல்லாம் ஒரு கண்துடைப்பு தான்.

ஈரான் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல் ஒருபுறமிருக்க இஸ்ரேல் மீது ஈரானும் தாக்கி வருகிறது. நீண்டகால பொருளாதர ஆதிக்கம் காரணமாகவே அவசரமாக இந்த போர் மேற்குலக நாடுகளின் உந்துதலால் தொடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.



# இரத்தினபுரி - அவிசாவெல்ல வீதியில் பஸ் - லொறி விபத்து; 23 பேர் காயம்!

இரத்தினபுரி – அவிசாவெல்ல வீதியில் லொறி மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் மோதியதில் பாரிய விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் 23 பேர் காயமடைந்துள்ளனர். இவர்களில் இருவர் நிலை கவலைக்கிடமாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எஹெலியாகொடை, மின்னான ஜங்சன் அருகே, இரத்தினபுரி – அவிசாவெல்ல வீதியில் இன்று (18) காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.விபத்தில் 23 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்து சபை பஸ்ஸும் லொறி ஒன்றும் வளைவு பகுதியில் நேருக்கு நேர் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களில் 9 பெண்களும் 14 ஆண்களும் உள்ளடங்குவர்.பஸ் மற்றும் லொறி சாரதிகளும் காயமடைந்துள்ளர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# குழந்தையைப் பணயம் வைத்து கப்பம் கோரிய இரண்டு பேர் கைது!

## அவர்களிடமிருந்து போலித் துப்பாக்கிகளும் மீட்பு

குழந்தையைக் கொலை செய்யப் போவதாக மிரட்டி 2 மில்லியன் ரூபா கப்பம் கோரிய 2 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் நீர்கொழும்பு பிரிவு குற்றப் புலனாய்வுப் பணியகத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

படல்கம பொலிஸ் பிரிவில் உள்ள மல்லவகெதரவில் வசிக்கும் நபர் ஒருவரின் குழந்தையைக் கொலை செய்வர் என்று மிரட்டி இந்தக் கப்பம் கோரப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த நபர் சம்பவம் தொடர்பில் நீர்கொழும்பு பிரிவு குற்றப் புலனாய்வுப் பணியகத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக, நீர்கொழும்புப் பிரிவு குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் அதிகாரிகள் குழு, சீதுவ பொலிஸ் பிரிவில் உள்ள தம்பத்துரை பகுதியில் நேற்று சோதனை நடத்தியது. இதன்போது கப்பம் கோரிய இரண்டு சந்தேக நபர்களைக் கைது செய்து படல்கம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். சந்தேக நபர்கள் 32 மற்றும் 46 வயதுடையவர்களாவர்.

விசாரணையில், இந்த குற்றத்துக்காக இரண்டுதிட்டமிட்ட குற்றவாளிகளின் பெயர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அவர்கள் இந்த சம்பவத்தில் ஈடுபடவில்லை எனவும் முறைப்பாட்டாளரை மிரட்ட இந்தப் பெயர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன எனவும் தெரியவந்துள்ளது.

இந்த குற்றத்தில் பயன்படுத்தப்பட்ட போலி துப்பாக்கி, மோட்டார் சைக்கிள் மற்றும் கப்பமாக பெற்ற பணத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஓட்டோ ஆகியவை பொலிஸார் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

குற்றத்தில் பயன்படுத்தப்பட்ட பல கையடக்க தொலைபேசிகள், அந்த தொலைபேசிகளில் உள்ள அனைத்து சிம் அட்டைகள், பல்வேறு வங்கிகளுக்கு சொந்தமான ஏரிஎம் அட்டைகள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஓட்டோ உட்பட அனைத்து ஆவணங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

படல்கம பொலிஸார் மேலும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கெக்கஸ்வோல்ட் தேயிலை தோட்டத்தில் குளவி கொட்டி 15 பேர் ஆஸ்பத்திரியில்!

பொகவந்தலாவ – கெக்கஸ்வோல்ட் தேயிலை தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது குளவி கொட்டியதில் 15 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந்தச் சம்பவமானது இன்று (18) மதியம் இடம்பெற்றுள்ளது.தோட்டத்தில் தேயிலைத் தளிர்கள் கொய்யும் தொழிலில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களே, குளவி கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இந்த நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பவர்களில் 7 பேர் சிகிச்சைகளின் பின் வீடு திரும்பியுள்ளனர் என்றும் 8 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# பழைய கட்டடச் சுவர் விழுந்ததில் கந்தளாயில் ஒருவர் உயிரிழப்பு!

கந்தளாயில் பழைய கட்டடச் சுவர் இடிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கந்தளாய், சாலியபுர பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயதுடைய கலுகபுகே சரத் பெரேரா என்பவர், தனது வீட்டுக்கு அருகிலுள்ள பழைய கட்டடத்தின் சுவரை அகற்ற முயன்றபோது அது இடிந்து விழுந்ததில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று தம் பலகாமம் பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

உயிரிழந்தவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை என தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் ஆரம்பகட்ட விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

சடலம் மேலதிக விசாரணைகளுக்காக கந்தளாய் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.






# மரம் முறிந்து வீழ்ந்ததில் பலத்த சேதமடைந்த கார்!

(மஸ்கெலியா)

ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் மரம் ஒன்று முறிந்து காருக்கு மேல் வீழ்ந்ததில் கார் பலத்த சேதமடைந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 7.30 மணிக்கு ஹட்டன் கொழும்பு பிரதான வீதியில் செனான் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது காரில் பயணம் செய்தவர்கள் தெய்வாதீனமாக எவ்வித காயமும் இன்றி உயிர் தப்பினார்.

இதனால் சுமார் ஒரு மணித்தியாலம் போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருந்தது.

ஹட்டன் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்து பகுதியளவில் மரத்தை வெட்டி அப்புறப்படுத்தி போக்குவரத்து சீர் செய்தனர்.



# வயலுக்குள் பாய்ந்த உழவு இயந்திரம்!

வெல்லாவெளி சூகாக்காச்சிவட்டையில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டு வயலுக்குள் வீழ்ந்தது உழவு இயந்திரம்.

மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள காக்காச்சி வட்டை புளியடி வீதியூடாக கருங்கற்களை ஏற்றிக் கொண்டு பயணித்த உழவு இயந்திரமே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் இன்று (18) காலை இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை . உழவு இயந்திரமும் சேதமடைந்துள்ளது.

# பா.ஜ.க. பின்னால் ஒளிந்து கொண்டு அநீதிக்கு துணை போகக் கூடாது

## சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த விஜய் வலியுறுத்தல்

தமிழகத்தில் தன்னிச்சையாக சாதிவாரி கணக்கெடுப்பு ஆய்வு நடத்த வேண்டும் என்றும் பா.ஜ.கவின் முதுகுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு சமூக அநீதிக்கு தமிழக அரசு துணை போகக்கூடாது எனவும் த.வெ.க. தலைவர் விஜய் வலியுறுத்தி யுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“சாதிவாரி கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களாக நடத்தப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் 2027 மார்ச் 1ஆம் திகதியை அடிப்படையாகக் கொண்டு கணக்கெடுப்பு நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சாதிவாரி கணக்கெடுப்பை நடத்தும் மத்திய அரசு, மக்கள் தொகை கணக்கெடுப்போடு சேர்த்து வெறும் கண்துடைப்பு சாதிவாரி தலைக்கட்டுக் கணக்கெடுப்பாக நடத்தக் கூடாது. அனைத்து வகுப்பினருக்கும் இட ஒதுக்கீடு மற்றும் உள் ஒதுக்கீடு முறையாகக் கிடைக்கப் பெறும் வகையில் நடத்தப்பட வேண்டும்.

குறிப்பாக மக்களவைத் தொகுதிகளுக்கான மறுசீரமைப்பை நோக்கமாகக் கொண்டு நடத்தாமல், அனைத்து சமூகத்துக்கும் உரிய விகிதாச்சார அடிப்



படையில் அவர்களின் பிரதிநிதித்துவத்தை முன்னிலைப்படுத்துவதாக இருக்க வேண்டும். இதுவே முழு அளவிலான சமூக நீதி ஆகும்.

மக்கள் தொகை கணக்கெடுப்போடு சேர்ந்த சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்திருந்தாலும், மாநில அரசும் சாதிவாரி கணக்கெடுப்பு ஆய்வை நடத்த வேண்டும். அண்டை மாநில அரசுகள் சில தங்களுக்கான அதிகாரங்களைப் பயன்படுத்தி, தன்னிச்சையாக சாதிவாரி கணக்கெடுப்பு ஆய்வு நடத்தியுள்ளன. இந்த ஆய்வு மீண்டும் நடத்தப்படும் என்று சில மாநில அரசுகள் அறிவித்துள்ளன.

இந்த புதிய சாதிவாரி கணக்கெடுப்பு ஆய்வில், மக்களின் சமூக, கல்வி, பொருளாதார நிலை உள்ளிட்டவை குறித்த தரவுகள் முழுமையாகச் சேகரிக்கப்படும் என்றும், இதுதான் உண்மையான சமூக நீதியை நிலைநாட்டும் என்றும் அம்மாநில அரசுகள் தெரிவித்துள்ளன.

இடஒதுக்கீடு தொடர்பான பல வழக்குகளில் உச்ச நீதிமன்றம் கேட்டுள்ள விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் மற்றும் வகுப்புகளின் சமூக, வாழ்வாதார, பொருளாதார, கல்வி, வேலைவாய்ப்பு உள்ளிட்ட அனைத்திலும், எந்தெந்த நிலைகளில் தற்போது பின்தங்கி உள்ளனர் என்பதற்கான சரியான தரவுகள் மற்றும் தற்போதைய சமூக நிலை உள்ளிட்டவற்றின் விவரங்களை அதில் சேகரிக்க வேண்டும்.

அந்த ஆய்வானது அனைத்துச் சமூகத்துக்குமான பிரதிநிதித்துவத்தையும் சட்டப்படி செல்லத்தக்க, உகந்த உள் ஒதுக்கீட்டை உறுதி செய்யும் வகையிலான தரவுகளை முழுமையாக உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

இதைச் செய்யாமல் மாநில அரசுகள் சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த வேண்டியதில்லை என்கிற மத்திய அரசின் அறிவிப்பைத் தங்களுக்குச் சாதகமாக்கி கொண்டு, மக்கள் விரோத ஆட்சியை நடத்தி வரும் தி.மு.க. அரசு, பா.ஜ.கவின் முதுகுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு சமூக அநீதிக்குத் துணை போகக்கூடாது.” என்று குறிப்பிட்டுள்ளார்.

## அகமதாபாத் விமான விபத்து:

# இடிபாடுகளுக்கு இடையில் 100 பவுண் தங்க நகை மீட்பு

அகமதாபாத்தில் விமான விபத்து நிகழ்ந்த இடத்தில் இடிபாடுகளுக்கு இடையிலிருந்து கிடைத்த 100 பவுனுக்கும் மேற்பட்ட தங்க நகைகள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் இருந்து கடந்த 12 ஆம் திகதி லண்டனுக்கு புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் அடுத்த சில நிமிடங்களில் அருகில் இருந்து பி.ஜே. மருத்துவக் கல்லூரி விடுதி கட்டடம் மீது மோதியது. இந்த விபத்தில் விமானம் வெடித்து சிதறியதில் அதில் பயணம் செய்தவர்கள், விடுதியில் இருந்த மாணவர்கள், பொதுமக்கள் என மொத்தம் 279 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

விபத்தை தொடர்ந்து, அருகில் இருந்த ராஜு படேல் (வயது 56) என்ற கட்டுமான தொழிலதிபர் 5 நிமிடங்களில் தனது குழுவினருடன் சம்பவ இடத்தை அடைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டார்.

இதுகுறித்து ராஜு படேல் கூறும்போது, “விபத்துப் பகுதியில் அனல் கடுமையான இருந்ததால் முதல் 15 - 20 நிமிடங்கள்



எங்களால் நெருங்க முடியவில்லை. தீயணைப்பு படையின் முதல் குழு மற்றும் நோயாளர் காவுவண்டிகள் வந்தவுடந்தவுடன் நாங்கள் மீட்புப் பணியில் இறங்கினோம். தொடக்கத்தில் ஸ்ட்ரெச்சர்கள் இல்லாதால் காயம் அடைந்தவர்களை மீட்க, புடவைகள் மற்றும் பெட்ஷீட்களை பயன்படுத்தினோம்.” என்றார்.

படேல் குழுவினரை இரவு 9 மணி வரை சம்பவ இடத்தில் இருக்க அதிகாரிகள் அனுமதித்தனர். இதற்கிடையில் அவசர சேவைகள் பிரிவு அப்பகுதியை தங்கள் பொறுப்பில் எடுத்துக்கொண்ட பிறகு படேல் குழு அடுத்த காரியத்தை நோக்கித் திரும்பியது.

பயணிகளின் உடைமைகளும் விமான பாகங்களும் சிதறிக் கிடந்த அந்த கருகிய நிலத்தில் விலை உயர்ந்த பொருள்களை தேடும் பணியில் படேல் குழுவினர் ஈடுபட்டனர். இதில் 800 கிராமுக்கும் மேற்பட்ட (100 பவுன்) தங்க நகைகள், 80 ஆயிரம் ரூபா ரொக்கம், பாஸ்போர்ட்கள், பகவத்கீதை புத்தகம் ஆகியவற்றை மீட்டனர். இவை அனைத்தையும் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

மீட்கப்பட்ட அனைத்து உடைமைகளும் ஆவணப்படுத்தப்பட்டு வருவதாகவும், அவை நெருங்கிய உறவினர்களிடம் விரைவில் திருப்பித் தரப்படும் என்றும் உள்துறை இணை அமைச்சர் ஹர்ஷ் சங்கவி கூறியுள்ளார்.

# இஸ்ரேல் நடத்தும் தொடர் தாக்குதலால் டெஹ்ரானில் அணுக்கதிர் வீச்சு அபாயம்

## ஈரானின் புதிய இராணுவத் தளபதி உயிரிழப்பு



இஸ்ரேல் விமானப்படை நடத்திய தாக்குதலில் ஈரானின் புதிய இராணுவத் தளபதி அலி ஷத்மானி உயிரிழந்துள்ளார்.

அணுகுண்டு தயாரிப்பில் ஈரான் தீவிரம் காட்டி வரும் நிலையில், அந்நாட்டின் மீது இஸ்ரேல் விமானப்படை கடந்த 13 ஆம் திகதி திடீர் தாக்குதல் நடத்தியது. இதில், ஈரான் இராணுவத் தளபதி முகமது பகேரி, ஐ.ஆர்.ஜி.சி படை தளபதி உசைன் சலாமி, ஈரான் போர் கட்டளை தலைமையக தளபதி கோலாம் அலி ரஷீத் ஆகியோர் உயிரிழந்தனர்.

தொடர்ந்து, ஈரானின் புதிய தளபதியாக அலி ஷத்மானி நியமிக்கப்பட்டார். இவர் ஐ.ஆர்.ஜி.சி. படை, போர் கட்டளை தலைமையக தளபதி பொறுப்பையும் கூடுதலாக கவனித்து வந்தார். இந்நிலையில், இஸ்ரேல் போர் விமானங்கள் நேற்று முன்தினம் நள்ளிரவில் டெஹ்ரானில் உள்ள இரகசிய இடத்தை குறிவைத்து தாக்கின. இதில் புதிய இராணுவத் தளபதி அலி ஷத்மானி உயிரிழந்தார்.

இஸ்ரேல் – ஈரான் போர் நேற்று 5 ஆவது நாளாக நீடித்தது. ஈரான் தலைநகர் டெஹ்ரானில் உள்ள இராணுவ முகாம்கள், எண்ணெய் வயல்கள், மின் விநியோக கட்டமைப்புகள், குடிநீர் விநியோக கட்டமைப்புகளை குறிவைத்து இஸ்ரேல் போர் விமானங்கள், ட்ரோன்கள் அதிதீவிர தாக்குதலை நடத்தின. ஈரானின் மத்திய வங்கி மற்றும் பிரதான வங்கிகளைக் குறிவைத்து இஸ்ரேலின் மொசாட் உளவுப் பிரிவு இணைய தாக்குதலை நடத்தியது. இதனால், ஈரானின் வங்கித் துறை முழுமையாக முடங்கியுள்ளது. ஈரானில் இதுவரை 224 பேர் உயிரிழந்துள்ளனர். 2,000 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

ஈரான் இராணுவத்திடம் 20,000 இற்கும் மேற்பட்ட அதிநவீன ஏவுகணைகள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. அந்நாட்டு இராணுவம், இஸ்ரேலை குறிவைத்து தினமும் 100 இற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசி வருகிறது. இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் இராணுவ தலைமையகம் மற்றும் மொசாட் உளவுப் பிரிவின் தலைமை அலுவலகம் ஆகியவை செயல்படுகின்றன. இரு அலுவலகங்களையும் குறிவைத்து ஈரான் இராணுவம் நேற்று ஏவுகணைகளை வீசியது. இதில் மொசாட் அலுவலகத்தின் மீது சில ஏவுகணைகள் விழுந்தன. அந்த வளாகம் முழுவதும் தீப்பிடித்து எரிந்தது.

இதுகுறித்து இஸ்ரேல் இராணுவ வட்டாரங்கள் கூறும்போது, "எங்களது வான் பாதுகாப்பு கவசங்கள் மிகவும் வலுவாக உள்ளன. ஈரான் இராணுவம் வீசும் ஏவுகணைகளில் 90 சதவீதத்தை நடுவானில் இடைமறித்து அழித்து விடுகிறோம். எனினும் 10 சதவீத ஏவுகணைகள் இஸ்ரேலில் விழுகின்றன. பொதுமக்கள் அனைவரும் பதுங்கு அறைகளில் தஞ்சமடைந்துள்ளனர். இதனால் பெரிய அளவில் உயிரிழப்பு ஏற்படவில்லை. இதுவரை 24 பேர் உயிரிழந்துள்ளனர். 600 பேர் காயமடைந்துள்ளனர்." என்று தெரிவித்தன.

கனடாவின் ஆல்பர்டா மகாணம், கனனாஸ்கிஸ் பகுதியில் கடந்த 15 ஆம் திகதி ஜி7 அமைப்பின் உச்சி மாநாடு தொடங்கியது. இதில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, கனடா, ஜப்பான் நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர். ஜி7 உச்சி மாநாட்டின்போது இஸ்ரேல், ஈரான் இடையே போர் நிறுத்தத்தை ஏற்படுத்த வலியுறுத்தி தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இந்த தீர்மானத்தில் கையெழுத்திட அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மறுத்துவிட்டார். மேலும், மாநாட்டை பாதியில் முடித்துக்கொண்டு அவர் அமெரிக்காவுக்கு திரும்பிவிட்டார்.

சமூக வலைதளத்தில் ட்ரம்ப் வெளியிட்ட பதிவில்,

"அணுசக்தி ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திட்டிருக்க வேண்டும். அந்த நாடு அணு ஆயுதங்களை வைத்திருக்கக்கூடாது என்று பலமுறை கூறினேன். ஆனால், ஈரானின் பிடிவாதத்தால் மனித உயிர்களை இழந்து வருகிறோம். ஈரான் தலைநகர் டெஹ்ரானில் வசிக்கும் மக்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேற வேண்டுகிறேன்." என்று கூறியுள்ளார்.

கனடாவில் இருந்து அமெரிக்காவுக்கு திரும்பும்போது விமானத்தில் ட்ரம்ப் அளித்த பேட்டியில்,

" இஸ்ரேல், ஈரான் இடையே தற்காலிக போர் நிறுத்தத்தை ஏற்படுத்த நான் விரும்பவில்லை. ஈரானின் அணு ஆயுதத் திட்டங்களுக்கு நிரந்தர முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க இராணுவ முகாம்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தினால், அந்த நாடு பேரழிவை சந்திக்கும்." என்று தெரிவித்தார்.

டெஹ்ரானில் வசிக்கும் மக்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்திருப்பதால், ஈரான் முழுவதும் பதற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஈரான் மீது அமெரிக்கா மிகப் பெரிய தாக்குதலை நடத்தக்கூடும் என்ற அச்சத்தால் டெஹ்ரானில் வசிக்கும் மக்கள் வாகனங்களில் வெளியேறி வருகின்றனர். இதனால் டெஹ்ரான் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்றிரவு முதல் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலையில், உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ராஸ் அதானான் கேப்ரியாசஸ் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், "ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் கவலையளிக்கின்றன. இதனால் ஈரான் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதி மக்களின் உடல் நலம் மிக மோசமாக பாதிக்கப்படும்." என்று தெரிவித்துள்ளார்.

சர்வதேச அணுசக்தி நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில்,

"ஈரானின் நடான்சு அணுசக்தி தளம் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எனினும், அந்த நாட்டின் போர்டோ, இஸ்பஹான் அணுசக்தி தளங்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லை" என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ஈரான் தலைநகர் டெஹ்ரான் மற்றும் நடான்சு பகுதிகளில் அணுக்கதிர் வீச்சு ஏற்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. அந்த நாட்டின் மூத்த அரசியல் தலைவர்கள், இராணுவ அதிகாரிகள் குடும்பத்துடன் ஈரானின் பாதுகாப்பான பகுதிகள் மற்றும் வெளிநாடுகளுக்கு தப்பி செல்கின்றனர் என கூறப்படுகிறது.



# இந்தோனேசியாவில் எரிமலை வெடிப்பு

இந்தோனேசியாவின் லெவோடோபி மலையில் நேற்று எரிமலை வெடித்துச் சிதறியுள்ளதைத் தொடர்ந்து, சாம்பல்கள் வெளியேறி வருவதாக அந்த நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தோனேசியாவின் கிழக்கு நுஸா தெங்காரா மாகாணத்தின், ஃப்ளோரஸ் தீவில் உள்ள லெவோடோபி லகி லகி எனும் எரிமலை வெடித்துள்ளது.


இந்த எரிமலை வெடிப்பின் காரணமாக அப்பகுதியில், 11 கிலோமீற்றர் தூரத்திற்குச் சாம்பல் படலம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக எரிமலையின் 7 கிலோமீற்றர் சுற்றளவில் வசிக்கும் மக்கள், பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர் என வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.



பக்கங்கள் - 03
கனடா முரசு
புதன்கிழமை 18/06/2025

## இந்திய மாணவர் சடலமாக மீட்பு




C2▶








# உக்ரைனுக்கு துணை நிற்கும் கனடா; 4.3 பில்லியன் டொலர் நிதியுதவி

## ரஷ்யாவிற்கு புதிய தடைகள்

ஜி7 மாநாட்டின் போது, கனடாவின் பிரதமர் மார்க் கார்னி, உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கியுடன் சந்தித்து முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டார்.

கனடா, உக்ரைனுக்கு 4.3 பில்லியன் கனேடிய டொலர் மதிப்புள்ள உதவியை உறுதியளித்துள்ளது.

இதில் 2 பில்லியன் கனேடிய டொலர், ஆயுதங்கள், ட்ரோன்கள், குண்டுகள் மற்றும் வாகனங்கள் ஆகியவற்றை வாங்குவதற்கும், நான்காவது தலைமுறை இராணுவ தேவைகளுக்காக நேட்டோ பாதுகாப்பு செலவில் சேர்க்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. C2▶

# பிரதமர் மோடியை வரவேற்கிறோம்: கனடா இந்து அமைப்புக்கள் தெரிவிப்பு



கனடாவில் நடைபெற்ற ஜி7 உச்சி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். பிரதமர் நரேந்திர மோடி, 3 நாடுகளுக்கான 5 நாள்கள் உத்தியோகபூர்வ பயணத்தின் முதல் கட்டமாக, மத்திய தரைக் கடல் பகுதியில் அமைந்துள்ள தீவு நாடான சைப்ரஸுக்கு கடந்த 15 ஆம் திகதி சென்றார். இதைத் தொடர்ந்து அங்கிருந்து திங்கள்கிழமை மாலை புறப்பட்டார். இந்நிலையில், நேற்று காலை கனடாவுக்கு பிரதமர் மோடி சென்றடைந்தார்.

கனடாவின் அல்பாட்டா நகரிலுள்ள கால்கரி விமான நிலையத்தில் அந்நாட்டு அரசுத் தரப்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. இதில் கனடா நாட்டின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர். இதைத் தொடர்ந்து அங்கு வசிக்கும் இந்திய வம்சாவளியினர் பிரதமர் மோடியைச் சந்தித்தனர்.

கனடாவிலுள்ள பத்திரிகையாளர் ஹலீமா சாடியா கூறும்போது,

“கனடாவில் 15 லட்சம் இந்திய வம்சாவளியினர் வசிக்கின்றனர். C2▶






# இந்திய மாணவன் சடலமாக மீட்பு

கனடாவுக்கு கல்வி கற்பதற்காகச் சென்ற இந்திய மாணவர் ஒருவர் மாயமாகியுள்ள விடயத்தால் அவரது குடும்ப உறுப்பினர்கள் கலக்கமடைந்திருந்த நிலையில், தற்போது அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ள விடயம் அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது.

ஏப்ரல் மாதம், இந்தியாவின் ஹரியானாவிலிருந்து கனடாவுக்குக் கல்வி கற்பதற்காக சென்றார் சாஹில் குமார் (வயது 22).

மே மாதம் 16 ஆம் திகதி, ஹாமில்டனில் தான் தங்கியிருந்த வீட்டிலிருந்து, ரொரன்றோவில் தான் கல்வி கற்கும் Humber கல்லூரிக்குப் புறப்பட்டுள்ளார் குமார்.

1.00 மணியளவில், தனது கல்லூரி இருக்கும் இடத்துக்கு அருகே குமார் நடமாடும் காட்சிகள் கண்காணிப்பு கருவியில் பதிவாகியுள்ளன. அதற்குப் பிறகு குமாரைக் காணவில்லை.

இந்நிலையில், ரொரன்றோவில் குமாருடைய உயிரற்ற உடல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளார்கள்.

அவரது மரணத்தின் பின்னணியில் குற்றச்செயல் எதுவும் இல்லை என்றும் பொலிசார் தெரிவித்துள்ளார்கள்.

மகன் கனடாவுக்குச் சென்றதை யடுத்து அளவற்ற மகிழ்ச்சியடைந்திருந்த குமாரின் குடும்பத்தினர், குமார் காணாமல் போனதால் அவருக்கு என்ன ஆயிற்று என்று தெரியாமல் கவலையில் ஆழ்ந்திருந்தார்கள்.

இந்நிலையில்தான், மே மாதம் 27ஆம் திகதி, நீர் நிலை ஒன்றில் குமார் உயிரிழந்துகிடந்தது கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் கூற, குமார் குடும்பத்தினர் அதிர்ச்சியடைந்தார்கள்.

காணொலி அழைப்பு மூலம் அவரது உடல் அடையாளம் காணப்பட்டது.

அதற்குப்பின், கனேடிய பொலிஸார் தங்களை அதிகம் தொடர்பு கொள்வதில்லை என்கிறார்கள் குமார் குடும்பத்தினர்.

பிள்ளைக்கு என்ன ஆனது என புரியாமல், சமீபத்தில் கனடாவில் காணாமல்போன இந்திய மாணவர்களின் குடும்பங்களை தொடர்புகொண்டு விசாரித்து வருகிறார்கள் அவர்கள்.

இதற்கிடையில், குமாருடைய உடல் எங்கு கண்டுபிடிக்கப்பட்டது என்பது போன்ற எந்த விவரங்களையும் வெளியிடாமல் வைத்துள்ளார்கள் கனேடிய பொலிஸார். அமெரிக்கா, இரும்பும் மற்றும் அலுமினியத்திற்கான வரிகளை இரு மடங்காக உயர்த்தியமை குறித்து கனடா அதிருப்தி வெளியிட்டுள்ளது.

உலகத்தின் அனைத்து நாடுகளிலும் இருந்து இறக்குமதி செய்யப்படும் இரும்பு மற்றும் அலுமினியத்துக்கு வரிகளை இருமடங்காக அதிகரிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்திருந்தார்.

இந்த நடவடிக்கையை சட்டவிரோதமானதும், நீதியற்றதுமானதும் என கனடாவின் பிரதமரின் அலுவலகம் கடுமையாக விமர்சித்துள்ளது.

இந்த வலுக்கட்டாய வரிகளை நீக்குவதற்கான புதிய பொருளாதார, பாதுகாப்பு உடன்பாட்டை அமெரிக்காவுடன் தீர்மானிக்க கனடா தீவிர பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது என பிரதமர் அலவலகம் தெரிவித்துள்ளது.

மேலும், கனடா விதித்த பகிரங்க பதிலடி வரிகளிலிருந்து 90 பில்லியன் டொலருக்கும் மேற்பட்ட வருமானம் கனடிய தொழிலாளர்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவாக பயன்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்ட உத்தரவின் அடிப்படையில், வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய இராச்சியத்துக்கு மட்டும் இந்த வரி உயர்விலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

---

## பிரதமர் மோடியை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 2 வருடங்களாக இந்தியா, கனடா உறவு மோசமாக இருப்பது இந்திய வம்சாவளியினரிடையே மன உளைச்சலை ஏற்படுத்தியிருந்தது.” என்றார்.

கனடாவிலுள்ள இந்து அமைப்பின் தலைவர் விஷால் சைனி கூறும்போது,

“பிரதமர் மோடியை வரவேற்கிறோம். இந்தியா, கனடாவின் பொருளாதார வளர்ச்சிக்காக 15 லட்சம் இந்திய வம்சாவளியினர் முக்கிய பங்களிக்கின்றனர்.” என்றார்.

மாலையில் கனனாஸ்கிஸ் பகுதியில் ‘ஜி7’ உச்சி மாநாடு தொடங்கியது. இதில் பிரதமர் மோடி கலந்து கொண்டார். மாநாட்டில் அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், ஜேர்மனி, ஜப்பான், இத்தாலி, கனடா உள்ளிட்ட நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

மாநாட்டையொட்டி பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தையை பிரதமர் மோடி நடத்துவார் எனத் தெரியவந்துள்ளது. மாநாட்டில் பங்கேற்று முடித்த பின்னர் இன்று (ஜுன் 18) குரேஷியாவுக்கு பிரதமர் மோடி செல்லவுள்ளார். அங்கு அந்நாட்டின் ஜனாதிபதி ஸோரன் மிலனோவிச், பிரதமர் ஆன்ட்ரேஜ் பிலென்கோவிச் ஆகியோரை அவர் சந்தித்துப் பேசவுள்ளார்.

---

## உக்ரைனுக்கு...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் 2.3 பில்லியன் கனேடிய டொலர் நிதி, யுத்தத்தில் சேதமான உக்ரைனின் உட்கட்டமைப்பை புதுப்பிக்க கடனாக வழங்கப்படும். இதற்கான வட்டிப்பணம், ஐரோப்பாவில் முடக்கப்பட்டுள்ள ரஷ்ய சொத்துகளிலிருந்து பெறப்படும்.

இந்த சந்திப்பில், ரஷ்யாவின் சமீபத்திய தாக்குதல்களில் 12 பேர் உயிரிழந்ததும், 130 பேர் காயமடைந்ததும் பேசப்பட்டன.

“நாங்கள் சமாதான பேச்சுவார்த்தைக்கு தயார், ஆனால் அதற்கும் முன் ரஷ்யாவிற்கு அழுத்தம் தேவை,” என ஜெலென்ஸ்கி வலியுறுத்தினார்.

கனடா, ரஷ்யாவின் ளாயனழற கடநநவ என அழைக்கப்படும் எண்ணெய்க் கப்பல்களுக்கு மற்றும் 77 தனிநபர்கள், 39 நிறுவனங்களுக்கு புதிய தடை நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

மொத்தம் 201 கப்பல்கள் பன்னாட்டு தடைகளை மீறி எண்ணெய், இயற்கை எரிவாயு மற்றும் ஆயுதங்களை கடத்துவதாக பட்டியலிடப்பட்டுள்ளது.

நேட்டோவின் 2 வீத GDP பாதுகாப்பு செலவீடு இலக்கை எட்ட கனடா திட்டமிட்டுள்ளதாக கார்னி கூறினார். இது, எதிர்வரும் ஹேக் மாநாட்டில் முக்கிய அம்சமாக இருக்கும்.

# அல்பர்ட்டா மாகாணத்தில் தட்டம்மை பரவல் அதிகரிப்பு

கனடாவின் அல்பர்ட்டா மாகாணத்தில் கடந்த மார்ச் மாதத்திலிருந்து தற்போது வரை 932 தட்டம்மை நோய்களுக்கான உறுதிப்படுத்தப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

கடந்த வார இறுதியில் மட்டும் 53 புதிய சம்பவங்கள் பதிவாகியுள்ளன என அல்பெர்டா மாகாண அரசின் தரவுத்தள விவரங்கள் தெரிவிக்கின்றன.

இது கடந்த 40 ஆண்டுகளில் அல்பேர்டா மாநிலம் சந்தித்த மிக உயர்ந்த தட்டம்மை பாதிப்பு இதுவாகும் என தெரிவிக்கப்படுகின்றது.



தட்டம்மை நோய்தடுப்பை கட்டுப்படுத்துவது சவாலான நிலை என அல்பெர்டா மருத்துவ சங்கத்தின் தலைவர் டாக்டர் ஷெல்லி டுகன் கூறியுள்ளார்.

கனடா 1998ஆம் ஆண்டு தட்டம்மை நோயாளர்கள் இல்லாத நாடுகளின் வரிசையில் இடம்பிடித்திருந்தது.

எனினும், தற்போது நோய் வேகமாக பரவும் நிலை உருவாகியுள்ளதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது வரை நான்கு பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர், இதில் ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளதாக அல்பெர்டா மாகாண அரசு தெரிவித்துள்ளது.

# மூன்று வயது குழந்தை மாயம்; தாயார் கைது

கனடாவின் மொன்றியலில் 3 வயது சிறுமி காணாமல் போன சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் சிறுமியின் தாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல், மூன்று வயது சிறுமி க்லேர் பெல் காணாமல் போயுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் சிறுமியின் தாயாரான 34 வயதுடைய ரேச்சல்-எல்லா டாட் என்ற பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி பெண் சிறுமியை கைவிட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

க்லேர் பெல் கடைசியாக ஞாயிறு காலை 9.45 மணியளவில் டுயளுயடடந பகுதியில் உள்ள நியுமென் பொலிவார்ட் நேறஅயெ டீழரடநஎயசன அருகே தனது வீட்டுக்கு அருகில் காணப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி சிறுமியின் தாயார் குழந்தையை காணவில்லை என பின்னர் கூறியுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குழந்தையை கண்டு பிடிக்க உதவுமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# ஒட்டாவாவின் ரிடோ நதியில் மூழ்கி மாணவன் உயிரிழப்பு



கனடாவின் ஒட்டாவா நகரில், திங்கள் கிழமை இரவு ரிடோ நதியில் நீந்த சென்ற ஒரு பதின்ம வயது மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் ஒட்டாவாவின் தெற்கு பகுதியில் உள்ள வால்டோன் அப்டோன் கொலின்ஸ் Walton Upton-Collins பூங்கா அருகே, இரவு 9.20 மணியளவில் நிகழ்ந்தது.

அந்த நேரத்தில் மூன்று பேர் ரிடோ நதியில் நீந்திக்கொண்டிருந்தனர் என தெரிவிக்கப்படுகின்றது.

நீரில் மூழ்கிய மாணவனை மீட்டு உயிர் காப்பு சிகிச்சைகள் வழங்கப்பட்ட போதிலும், அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

ஒட்டாவா தீயணைப்புப் படையினர் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளனர். மாணவன் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார் என மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கனடாவில் வெள்ளநீர் மற்றும் ஆறுகளில் நீந்தும்போது பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்துவது அவசியம் என்று மீட்புப் படையினர் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.